
# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவராண்டு 2012
ஐப்பசி 23
முஹற 10
ஞாயிறு (8-11-1981)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 43
☎ 8164
விலை: ரூபா 1-50

# சமாதானம் என்ற பெயரில் தமிழினத்துக்கு சவக்குழி!

## விடுதலைப் போராளிகளை வேரோடழிப்பதே ஜெயவர்த்தனவின் சதித்திட்டம்!

### அவுஸ்ரேலிய ஏடு 'வேக்கேர்ஸ் நியூஸ்' எச்சரிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரின்கீழ் தமிழினத்தையும் தமிழீழ விடுதலைப் போராளிகளையும் அழித்தொழிப்பதே ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சதித் திட்டம் என்று அவுஸ்ரேலியா மெல்பேர்னின் தலைநகரான மெல்போனிலிருந்து வெளிவரும் வேக்கேர்ஸ் நியூஸ் (WORKERS NEWS) என்ற ஆங்கில வாரமிருமுறை ஏடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

செப்டம்பர் 29—1981 இதழில் "TAMiL HEAD AGREES TO ViGiLANTES" தமிழ்த்தலைமை அமைதிக்கு உடன் படுகிறது என்கிற தலைப்பில் JON BECK என்பவரால் ஒருபக்கக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

அதில் சிலபகுதிகள் வருமாறு.—

"இன அமைதியை மீள்விக்க" அரசின் மூன்று அம்சத்திட்டமொன்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை இணங்கியுள்ளதானது இலங்கையில் (தமிழ்) மக்கள் இயக்கத்துக்கு விழுந்த



ஒரு மரணஅடியாகவே கருதப்படுகிறது.

ஆகஸ்ட் 31 ஆம் திகதி அரசாங்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் செய்து கொண்ட உடன்பாடானது, தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆசை நிறைவேற வழிவகுப்பதாயமைந்துள்ளது.

சட்டத்தையும் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட அரசுப்படைகள் எடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் கூட்டணியும் அமிர்தலிங்கமும் கைகோத்து ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்ற நிபந்தனையை இந்த உடன்பாடு ஏற்படுத்தியுள்ளது.

ஆயுதப்படைகளை ஜெயவர்த்தன அனுப்புவதன்முதலாவது நோக்கம், தீவிரவாத இயக்கமான தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை முறிப்பது அ.டுத்து தமிழீழ விடுதலை இயக்கத்தையே முழுமையாக அழித்து விடுவது.

கூட்டணியுடன் உடன்பாடு செய்வதற்காக மறுசீரமைக்கப்படும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு முக்கிய இடம் அளிக்கப்படுமென்று ஜே.ஆர். உறுதிமொழியளித்தார். அதிகாரப்பரவல் சுயாட்சி என்கிற மூலக்கோரிக்கையைப் பூசிமெழுகும் பொருட்டுகொண்டுவரப்பட்டதே இந்த அபிவிருத்தி சபைகளாகும்.

இதிலுள்ள 'பிடி' என்னவென்ருல் அதிகாரப்பரவல், அல்லது சுயாட்சி குறித்து ஆறுமாதங்களுக்குப்பகிரங்க



மாகப்பேசக்கூடாது என்ற நிபந்தனைதான்.

திரு. அமிர்தலிங்கம் 'பார் ஈஸ்டேர்ன் எக்கொனமிக் றிவ்யூ'வுக்குக் கொடுத்த பேட்டியில் அபிவிருத்திச் சபைகளில் தாங்கள்பங்கேற்பது எவ்வகையிலும் தமிழ் ஈழக் கோரிக்கையிலிருந்து வழுவியதாகாது என்று கூறியிருக்கிருர்.

பகிரங்க மேடைகளில் தமிழீழம் குறித்து ஆறு மாதங்களுக்குப் பேசுவதில்லைஎன்ற இடைக்கால முற்றுப் புள்ளிக்கு (MORATORIUM) தாம்

—8-ம் பக்கம் பார்க்க

# பயங்கரவாதத்தை ஒழிப்பதில் அரசுக்குக் கூட்டணி ஒத்துழைப்பு!

### அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் ஜே. ஆர். அறிவிப்பு

வட இலங்கையிலும் நாட்டின் வேறுசிலபகுதிகளிலும் தலை தூக்கியுள்ள பயங்கரவாதத்தை பூண்டோடு அழிப்பதில்அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாகத் தமிழர்விடுதலைக்கூட்டணி வாக்குறுதியளித்திருப்பதாக ஜனுதிபதி ஜே.ஆர், ஜெயவர்த்தன நேற்று (3-11-81) நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அறிவித்தார்.

தமிழர்விடுதலைக்கூட்டணி இவ்வாறுஒத்துழைப்புஅளிக்கத் தவறுமானுல் அதன்பின் எவ்விதமான நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென்பது குறித்து அரசாங்கம் ஆலோசிக்கும் என்றும் ஜனுதிபதி ஜெயவர்த்தன எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

புலிகள் எனப்படும் இயக்கத்துக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும்தொடர்பு கிடையாது என்பதைத்தாம் ஏற்றுக் கொள்வதாகவும் ஜனுதிபதி தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தலைவர்களைச்சந்தித்துப் பேசக் கூட்டணியினர் இணங்கியிருப்பதாகவும் அவர் கூறினுர்.

அரசாங்கம்தமிழ்ஈழத்தை எதிர்ப்பதால் கூட்டணி தனது பேச்சுவார்த்தையின் போது, ஈழம் சம்பந்தமாக எதுவுமே பேசவில்லையென்றும் ஜெயவர்த்தன எடுத்துரைத்தார்.

தமிழ்த் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தை முறியடிக்க சில சக்திகள் முயற்சித்து வருவதாகவும், இதுபற்றி அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினுர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உயர் பதவிகளில் தமிழர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக சில அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டி இதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர்.

அவர்களது கூற்றை மறுத்த ஜனுதிபதி, வடக்கு,கிழக்கு மாகாணங்களில் கூடுதலாகச் சிங்களவர்களே உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டிருப்பதைப் புள்ளி விபரத்துடன் அங்கு நிரூபித்துக் காட்டினுர். ஆனுல் இவர்களுக்குத் தமிழ் தெரிந்தால் தான் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

(ஆதாரம்- 4-11-81 காலை 6.30 மணிக்கு ஒலிபரப்பப்பட்ட இலங்கை வானெலிச் செய்தி.)

# அரசாங்க ஏடுகள் மகிழ்ச்சி!

நாடாளுமன்றப்பகிஷ்கரிப்பைக் கைவிட்டு மீண்டும் நாடாளுமன்றம் செல்லக் கூட்டணித் தலைமைப் பீடம் தீர்மானித்ததையும் பயங்கரவாதத்தை முறியடித்து நாட்டில் அமைதியையும்நல்லுறவையும் நிலைநாட்ட அரசுடன் கூட்டணி கைகோர்த்துள்ளதையும் அரசாங்கஏடுகள் அனைத்தும் பூரிப்போடு வரவேற்றுள்ளன. சிலோன் டெய்லி நியூஸ், தினகரன், வீரகேசரி போன்றவை இதைப் பாராட்டி விசேட ஆசிரியத் தலையங்கங்களும் எழுதியுள்ளன.

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

# கூட்டணியினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் அடிப்படை நோக்கம் ஒன்றே!

## தமிழீழத் தனிநாட்டை உருவாக்குவதே அது!

*1981 நவம்பர் முதல் திகதி 'சண்டே ரைம்ஸ்' இதழில் அரசியல் விமர்சனப்பகுதியில், டி.ஜே. அமரசேகரா என்பவர், ''அமிர்தலிங்கத்தின்இரண்டுமுகங்கள்'' (TWO FACES OF AMIRTHALINGAM) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதியுள்ளகட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம். ''ரைம்ஸ்', நிறுவனம் அரசாங்கத்தின்கட்டுப்பாட்டுக்குள் இருப்பது என்பது தெரிந்ததே-*

—ஆசிரியர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அப்பாபிள்ளைஅமிர்தலிங்கம், வடக்கில்அண்மையில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளால் மூன்று இராணுவ அதிகாரிகள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

அக்டோபர் 28 ஆம்திகதி வெளிவந்த நாளேடுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு.எம். சிவசிதம்பரத்துடன் சேர்ந்து கூட்டாகவிடுத்திருந்த அறிக்கையிலேயே திரு அமிர்தலிங்கம் இவ்வாறு கண்டித்திருந்தார்.

மேற்படிஅறிக்கையில்தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம்பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்—

''தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது தமிழ் மக்களோ சட்டரீதியாகத் தமது கடமையையாற்றிய வேளையில் இந்த இராணுவ அதிகாரிகள் மீது நடத்தப்பட்ட ''கிறிமினல்'' தாக்குதல்களை மன்னிக்க முடியாது. மக்களுக்கும், ஆயுதப்படையினருக்கும், புரிந்துணர்வுடனும், கட்டுப்பாட்டுடனும் செயல்படுமாறு வி[illegible]ப்பிக்கிறோம்''

பயங்கரவாதிகள் நடத்திய இக்கொலைகளை இவ்வாறு வெளிப்படையாகக் கண்டித்து வெளிவந்த அறிக்கையை —அதிலும்சிறப்பாக அமிர்தலிங்கத்திடமிருந்து வந்த அறிக்கையை —மக்களின் சகல பகுதியினரும்வரவேற்றனர்.

இது இவ்வாறுஇருக்க,அக்டோபர் 26 ஆம்திகதிவெளிவந்த டெயிலிமிரர் பத்திரிகை சென்னையில் திரு. அமிர்தலிங்கம்நடத்தியபத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த விபரங்களை அக்டோபர் 24 ஆம் திகதிய 'சென்னை இந்து' பத்திரிகையிலிருந்து எடுத்து முழுமையாக மறுபிரசுரம்செய்திருந்தது.

இந்த அறிக்கையைப்பார்த்தபலரும் ஆத்திரமடையாவிடினும்ஆச்சரியத்தால்கண்களை அகல விரித்தனர்.

தமிழர் வீடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்தினால் அதில்தெரிவிக்கப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ ''......... எலிசபெத் மகாராணி இலங்கைத்தீவை விட்டு வெளியேறியவுடன் இராணுவத்தினாலும் பொலீசாராலும், மறுபடியும் தம் மீது அடக்குமுறைகட்டவிழ்த்து விடப்படும் என்றுதமிழ் பேசும் மக்கள் அஞ்சுவதற்குப் போதிய நியாயம் உண்டு''

★ ''இராணுவத்திலும், பொலீசிலும் கூடுதலான தமிழர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டால் மட்டுமே அமைதியைமீள்விக்கமுடியும்.இன்றைக்கு ஆயுதப்படைகளில் 95 சதவீதம் சிங்களவரே இருக்கின்றனர், தமிழர் சிங்களவர் சம்பந்தப்பட்ட எத்தகையசிறியசம்பவம்இன்று நடந்தாலும், அது இனக்கலவரமாக்கப்பட்டு, தமிழர்கள் மீதுதாக்குதலாகப் பரிணமிக்கிறது-

★ யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இராணுவத்தை:மட்டுமன்றி,பொலீசையும்திரும்பப்பெற்று,சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தாயகப் பாதுகாப்புப்படையொன்று நிறுவப்படுவதன்அவசியத்தைஅவர் (அமிர்)வலியுறுத்தினார்.

★ சிறீலங்காவில் அவசரகாலநிலை நீடிக்கப்பட்டது குறித்து அவரது (அமிரது) அபிப்பிராயம் கோரப்பட்டபொழுது, அதற்குப் பதிலளித்த அமிர்தலிங்கம் இதனால் தமக்கு மகிழ்ச்சியும் இல்லை துக்கமும் இல்லையென்றும், அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது இராணுவத்தாலும்,பொலீசாராலும் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதாகவும், அவசரகாலம் நீக்கப்பட்டால் சிங்களவர்களினால் தமிழர்கள் துன்புறுத்தப் படுவார்கள் என்றும், இரு வழியாலும் தமிழர்களுக்குத் துன்பமே விளைவதாகவும் தெரிவித்தார்.

★ இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களுக்கு எதிராக கடுமையான வன்முறைத் தாக்குதல் நடைபெற்றபோது, அதற்கு எதிராகஇந்திய மக்களும், இந்தியாவிலுள்ள அரசியற் கட்சிகளும் ஒரே மனிதனாக எழுந்து நின்று குரல் கொடுத்ததற்காக இலங்கைத் தமிழர்கள் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.''

இராணுவ அதிகாரிகள் பயங்கரவாதிகளின் கொலைக்கு ஆளானதைக்கண்டித்து ஆகக் கடைசியாக திரு. அமிர்தலிங்கமும் திரு. சிவசிதம்பரமும் விடுத்திருந்த கூட்டறிக்கையில் பின்வருமாறு கூறுகின்றனர்.

**''இக்கொலைகளுக்கு எவ்விதமான மன்னிப்பும் துளியும்கிடையாது.''**

''அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராகமேற்கொள்ளப்படும் பழிவாங்கும் நடவடிக்கையும் கண்டனத்துக்குரியது. ஒரு கட்டுப்பாடுள்ள படைக்கு இப்படியான செயல்கள்மதிப்பைத்தேடித்தராது..........''

அறிக்கை பின் வருமாறு முடிவுறுகிறது.

''தமிழ் மக்களின் இலட்சியத்தில் எவ்வகையிலேனும் முன்னேற்றம் காண இம்மாதிரியான வன்முறைகள் உதவி புரியமாட்டாதென்பதே எமது உறுதியான கருத்தாகும், அதற்கு மாறாக, தமிழ் மக்களின் துன்பங்கண்டு திரண்டுவரும் அனுதாபத்தை அழித்தொழிப்பதற்கே இது உதவும்''

இக் கூட்டறிக்கையிற் காணப்படும் உணர்வுகள் மறுத்துரைக்கப்பட முடியாதவை,தீவில் இன அமைதியையும், இணக்கத்தையும் விசுவாசமாக எதிர்பார்த்திருக்கும் சகலராலும் வரவேற்கப்பட வேண்டியவை.

'இந்து'வில் வெளியிடப்பட்ட திரு. அமிர்தலிங்கத்தின் சென்னைப் பத்திரிகை நிருபர் பேட்டியில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களை வைத்துக்கொண்டு ஒருவர் எவ்வாறான முடிவுக்கு வரமுடியும்?

அமிர்தலிங்கத்தின்அந்தப் பேட்டிஅறிக்கையில்,கடந்த பல மாதங்களாக ஈழப்பயங்கரவாதிகளால் மூன்று இராணுவத்தினருடன் சேர்த்து இருபதுக்கு மேற்பட்ட பொலீசார் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது பற்றி எதுவித குறிப்பும் கூறப்படவில்லை, வட பகுதியில் ஈழக்கோரிக்கைக்குஎதிரானவர்களும்) அதிகாரிகளுடன் ஒத்துழைத்தவர்கள் என்றுசந்தேகிக்கப்பட்டவர்களுமான அப்பாவித்தமிழர்கள் வடபகுதிப் பயங்கரவாதிகளால் கொலைசெய்யப்பட்டது பற்றியும் எவ்வித குறிப்பும் இல்லை.

அல்லது பயங்கரவாதிகளின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களில் தமிழர்களும், முஸ்லிம்களும் அடங்குவர் என்றும் அது சுட்டிக் காட்டவில்லை.

அண்மையில் இடம்பெற்ற வகுப்புக்கலவரம், சிங்களவருக்கும் தமிழருக்குமிடையேயான சண்டையென்பது போல அதைப்பெரிதுபடுத்தி இந்திய பத்திரிகையாளர் மாநாட்டில் செயலாளர் நாயகமான திரு.அ, அமிர்தலிங்கம் கூறியிருப்பது வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். சில முக்கிய விஷயங்களை மறைத்து விட்டு, பிரச்சினையைப் பூதாகாரமாக்கிக் காட்டுவது இனரீதியான பதட்ட நிலையைக் கட்டுப்படுத்துவதற்கோ இனஅமைதியை நிலைநாட்டுவதற்கோ எவ்வகையிலும் உதவி புரியாது.

இந்தநெருக்கடியானகாலகட்டத்தில், கூட்டணி செயலாளர் நாயகமாக மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் அமிர்தலிங்கம் உட்பட பொறுப்புவாய்ந்த அனைத்து அரசியல்வாதிகளும் கவனத்தில் எடுக்க வேண்டிய ஒரு விஷயம் இதுவாகும்.

ஒவ்வொருகால கட்டத்திலும் திரு. அமிர்தலிங்கம் தன்னுடைய மூளையின் பெரும்பகுதிஆற்றலைச்செலவிட்டு அவரது இதயத்தை ஆட்சிபுரிந்தஅரசியல் உணர்ச்சிகளைக் கொட்டியிருக்கலாம்.

கடந்தமாதம் ''இந்தியாருடே'' என்ற பிரசித்தியும் பெருமையும்மிக்க இந்திய சஞ்சிகை கேள்வி—பதில்வடிவத்தில் திரு. அமிர்தலிங்கத்தின் நீளமான பேட்டியொன்றைப் பிரசுரித்திருந்தது.

அவரிடம் கேட்கப்பட்டிருந்த ஒரு கேள்விவருமாறு:

''தென்னபிரிக்காவிலுள்ள கறுப்பினமக்கள் நடத்துகிற போராட்டம்தங்கள்சொந்த நாட்டை மீட்கபாலஸ்தீனிய

—7-ம் பக்கம் பார்க்க

## இவனே அவன்

நானெழுதும் எழுத்தெல்லாம் நற்கவிதை
ஆவதெனில்
தானெழுதும் பிரம்மனவன் தலையெழுத்தும்
வேண்டாமோ?
ஊனெழுதும் கவிதையிது உடம்பெழுதும்
கவிதையிது
உள்ளிருக்கும் கண்ணபிரான் உடனிருந்தே
எழுதுவது!
வான்முழுதும் மேகங்கள் வரிவரியாய்
நின்றாலும்
மாமழைக்கு வாய்ப்பிருக்கும் மணிமுகில்கள்
எத்தனையோ?
காணிருக்கும் பூவினங்கள் கணக்கிறந்து
பூத்தாலும்
தேனிருக்கும் பூவெனவே தேர்ந்தவைதான்
எத்தனையோ
பொங்குகடல் சிப்பிகளைப் போயெடுத்துப்
பார்த்தாலும்
தங்குகின்ற முத்தினங்கள் சார்ந்திருப்ப
தெத்தனையோ?
கட்டழகுப் பெண்ணினத்தைக் கணக்கெடுத்துப்
பார்த்தாலும்
பொட்டழகு நிலைத்திருக்கும் பூவையர்கள்
எத்தனையோ?
தத்திவரும் பிள்ளைகளைச் சார்ந்து நின்று
கண்டாலும்
புத்தியுள்ள பிள்ளையெனப் புலப்படுவ
தெத்தனையோ?
வாணிபத்தில் முன்னிருக்கும் வாணிபர்கள்
ஆயிரத்தில்
பூணுமொரு வெற்றியினைப் பூண்டவர்கள்
எத்தனையோ?
எல்லாம் தலையெழுத்தே, ஈசுவரன்
கையெழுத்தே
அல்லாமல் தன்னறிவால் ஆக்கியது
ஏதுமில்லை!
எங்கோ பிறந்தவர்கள் எங்கேயோ
வாழுவதும்
தங்காத ராகமெல்லாம் தங்கியரங்
கேறுவதும்
எண்ணெயிலா விளக்குகளும் எப்போதும்
எரிவதுவும்
கண்ணன் கொடுத்ததொரு கையளவு
வரமிலையோ?
நான்என்ப தென்னஅதன் நடுவிருப்ப
தென்னமுகம்
வான்நின்ற மாயவனின் வளர்சோதி
தங்கமுகம்!
அவனே படித்து வந்தான் அவனேதான்
எழுதுகிறான்,
அவனே புகழானான் அவனுக்கே
மாலையெல்லாம்!
அவனே நான் ஆனபின்னர் அவன் வேறு
நான் வேறா?
இவனே அவன் அதனை எதிர்காலம்
காட்டிவிடும்!

**—கவியரசு கண்ணதாசன்**

# எதை எழுதுவேன்?

அன்பு நண்பா,

நீண்டகாலம் உன்னோடு மனம்விட்டுப்பேச முடியவில்லை. எழுதிட முடியவில்லை. என் உள்ளத்துக்குள்ளேயே பல்வேறு சிந்தனைகளையும் எண்ணங்களையும் சுழல விட்டுக்கொண்டேயிருக்கிறேன். நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் காணுகிறபோது, உள்ளக் குமுறல்கள் ஒரு புறம். உணர்ச்சித் துடிப்புக்கள் ஒரு புறம். வேதனையும் வெய்துயிர்ப்பும் இன்னோர் புறம். பொங்கியெழும் கருத்துக்கள் அனைத்தையும் எழுத்தில் கொட்டிட முடியாதபடி தடுக்கிறது ஆதிக்கபுரியினரின் அவசரகாலச் சட்டம்— அதன் கீழான செய்தித் தணிக்கை!

கொடிய சிறைச்சாலைகளிலே — இராணுவ முகாம்களிலே—நீதிவிசாரணை ஏதுமின்றி— தடுப்புக் காவல் சட்டமெனும் சர்வாதிகாரச் சட்டத்தினுல் கட்டப்பட்டு தம் வாழ்க்கையையே மெழுகுவர்த்தியாக்கி தமிழ்ச் சமுதாயத்துக்கு சுதந்திர உணர்வு எனும் ஒளியைப் பாய்ச்சியபடி நாளொரு மேனியும் பொழுதொருமேனியுமாகச் செத்துக் கொண்டிருக்கும் ஐம்பதுக்கு மேற்பட்ட தியாக தீபங்களை எண்ணிப்பார்த்திடவா?

ஆயுதப்படையினரிடம் சிக்கினுல் அநியாயமாக உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டுமே எனும் அச்ச உணர்வு காரணமாக-தமது உயிரும் உடலும் தமிழீழ மண்ணின் விடுதலைக்காகவே என்னும் வைராக்கிய உணர்வுடன், வீடு வாசல்களை துறந்து பசிபட்டினியுடன் அலையும் தமிழீழ விடுதலைவீரர்களை—விடுதலைப்போராளிகளை— எண்ணித் தொழுதிடவா?

தமிழீழத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள ஸ்ரீலங்காவின் ஆயுதப்படையினரால் நாள் ... தெருவோரங்களிலும், புகையிரதத்தி தோழு... வீதியிலும் காணுமிடமெங்கணும்லும், க... அடிக்கும், உதைக்கும், துப்பாக் அநாவசியம...ம், அவமரியாதைக்கும், அவமதிப்கிச் சூட்டுக்கு... எம் சொந்த நாட்டிலேயே ஏன் புக்கும் ஆ...ம் அடிமைகளாக என்று வீங்கிய முது பிறந்தே... ட்டவியபடி அழுது குமுறும் அப்பாவித் தமிழர்களை எண்ணி அழுதிடவா?

தமிழீழ சுதந்திர அரசை மீட்பதொன்றையே ... நோக்கமாகக் கொண்டு மக்கள் ஆணையைப் பெற்ற கூட்டணி என்ற விடுதலை இயக்கம், இன்று வெறும்அரசியற் கட்சியாகிஎங்கோ அடித்துச் செல்லப்பட்டு, பதவிகளைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஏதேதோ பிதற்றியபடி ஆதிக்கவெறியரிடம்சரணுகதியடைந்திருக்கும் நிலையை எண்ணி வேதனைத் தீயில்வெந்துகருகுவதா?

எதைச் சொல்வேன்? எதை எழுதுவேன்?

தமிழினத்தின் விடிவுக்கான ஒரே இலட்சியம்— தமிழ்மக்களின் விட்டுக்கொடுக்கமுடியாத ஒரே கொள்கை — சிந்தனை — செயல் — குறிக்கோள் — அனைத்துமே "சுதந்திரத் தமிழ்ஈழம்" என்ற நிலைமாறி— இன்றைக்கு ஏதோ தமிழ்மக்களின் நோக்கம், நான்கு அம்சம்தான் என்பது போலக் குறுக்கப்பட்டு, "சுதந்திர வேட்கை" குற்றுயிரும் குறையுயிருமாக கொலை செய்யப்படுகிறதே— அதை எழுதுவேனு?

அடிமைப்பட்ட நாடுகள் எல்லாம் சுதந்திரத்துக்காகப் புரட்சி செய்து கொண்டிருக்க— இங்கே தமிழீழத்தின் அடிமை நிலை துடைத்து சுதந்திரக் கதிர் பரப்புவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட் நம்முடைய தலைவர்கள், அச்சத்தின் காரணமாக அடிமைத் தனத்தை ஏற்றுக்கொண்டு சமாதானம் என்ற பெயரில்சரணுகதியடைந்து தமிழீழ விடுதலை உணர்வை ஆழக்குழி தோண்டிப் புதைத்திடும் துரோகச் செயலில் ஈடுபடுவது கண்டு பேதைமனத்தால்பேசாமலிருந்திட முடியவில்லையே!

யாழ்ப்பாணத்தில் 1981 மே 31 முதல் ஒரு கிழமையாக நிகழ்ந்த ஆயுதப்படையினரின் வன் செயலையடுத்து—தற்காலிகமாக எழுந்ததே த.வி.கூட்டணியின் ஐந்துஅம்சக்கோரிக்கையே தவிர—அவையே தமிழினத்தின் அடிப்படை இலட்சியமுமல்ல—அல்லது அவை நிறைவேற்றப்பட்டவுடன் தமிழர்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைத்துவிடும் என்பதுமல்ல.

ஐந்து கோரிக்கையிலும், உயிர்த்துடிப்பான உருப்படியான கோரிக்கையான சர்வதேச நீதிவிசாரணைக் குழு நியமிக்கப்படவேண்டும் என்பது அலட்சியப்படுத்தப்பட்டுத்தூக்கியெறியப்பட்டபின்னர், தொடர்ந்தும் என்ன பேச்சு வார்த்தை? தொடர்ந்தும் என்ன சமரசம்? நமக்கு ஒன்றுமே விளங்கவில்லையே!

நமது தமிழீழத் திருநாடு நமக்காக வேண்டும்—சுதந்திரமும் இறைமையும் கொண்ட அரசு ஆங்கு அமைக்கப்படவேண்டும்— அதற்காகப் போராட வேண்டும்— தமிழீழம் மீண்டும் உயிர் பெறுவதிலேயே நமது வாழ்வும்வளமும் தங்கியுள்ளது—என்கிற அடிநாத இலட்சியம் மூலைக்குள் தூக்கி வீசப்பட்டுஒன்றுக்கும் பயனற்ற 'நான்குஅம்சம்' என்ற நூலிழையில் இன்று பிடித்துத் தொங்குகிருர்களே விடுதலைக்கு வழிகாட்டும் பொறுப்பேற்றிட்ட தலைவர்கள்—விழலுக்கு நீர்பாய்ச்சி வீணுகக் காலம் கடத்துகிருர்களே —இந்த வேதனை நெருப்பை எழுத்தாக்கித் தந்திடவா?

நமது இனத்தின் குல தெய்வம் — நமது தேசத் தந்தை செல்வா அவர்கள் 1949 ஆம் ஆண்டே தமிழினத்துக்கு இருக்கின்ற — தமிழினம் செல்லக்கூடிய மூன்று பாதைகளைக் காட்டினுர்.

## அரசியல் மடல்

ஒன்று- ஒத்துழைப்பு என்ற பெயரில் சரணுகதி.

இரண்டாவது- ஆயுத மேந்திப் போராடுவது—

மூன்ருவது- சாத்வீக வழியில்போராடுவது.

முதலாவது வழியை- அதாவது சரணுகதி வழியை- மானமுள்ள எந்தத் தமிழனுமே ஏற்றிட மாட்டான். இரண்டாவது வழியாகியஆயுதப் போராட்டம், நாம்எண்ணிக்கையில் குறைந்தோராகையால் நமக்கு ஏற்புடையதல்ல- மூன்ருவது வழியாகிய சாத்வீக வழியிலேயே நமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்தார் தந்தை செல்வா.

தந்தை செல்வாவினுல் உருவாக்கப்பட்ட இயக்கம், அவரால்நிராகரிக்கப்பட்டவன்முறை வழியை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஒருவரால் புரிந்து கொள்ளக் கூடியதே!

ஆயின் அவர் காட்டியபடி சாத்வீக வழியிலாவது தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறுகிறதா என்ருல்— ஒரு சிறுஅசைவுதானும் அவ்வழியில் நிகழவில்லை. மக்களை சாத்வீகப் போராட்டத்தில் இறக்கி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு மக்கள் விடுதலை இயக்கமாகி, இருந்திருந்தால்— சில வேளைகளில் வன்முறை தலை தூக்கும் நிலை தோன்ருதவாறுகூடத் தடுத்திருக்கமுடியும்.

ஆனுல் சாத்வீகப்போராட்டம்பற்றிஎன்ன கூறுகிறது கூட்டணியின் இன்றைய தலைமைப் பீடம்?

> "சுதந்திரக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடத்தியது போல— இன்றைய அரசுக்கு எதிராக சாத்வீகப் போராட்டம் நடத்தினுல், எமது போராட்டம் தொடங்கிய 24 மணி நேரத்தில் வன்முறைச் சம்பவங்கள் தெற்கில் 'மட்டுமல்ல—வடக்கிலும் தலை தூக்கும், இதனுல் எமக்குப் பேரழிவே ஏற்படும். பயன் கிடைக்காது."

இவ்வாறு செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் த.வி. கூட்டணியின் பொதுச் சபைக்கூட்டத்தில் பேசியிருப்பதாக 2-11-81 வீரகேசரிச் செய்தி கூறுகிறது. செல்வாவின் சீடரது வாயிலிருந்தா இவ்வார்த்தை வந்து விழுந்திருக்கிறது. அப்படியானுல் வன்முறைக்கு நாம் அடிபணிந்து சரணுகதியடைகிருேம் என்று தான் அர்த்தமா?

தந்தை செல்வா ஒரு தடவை பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பின்வருமாறு கூறினுர்;-

> "நாம்-தமிழரசுக்கட்சியினர்- எமது மக்களின் உரிமைக்காக எதனைச் செய்தாலும், அது சிங்களவருக்குக் கோபத்தை ஏற்படுத்தும். அதனுல் நாம் கைகட்டியபடி பேசாமல் இருக்க வேண்டும் என்று சிலர் எமக்குப் புத்தி கூறுகிருர்கள், தமிழர்கள் மூச்சுவிடுவது கூடச் சிங்களவர்களுக்குக் கோபம் வருமானுல், நாளை எம்மை மூச்சுக் கூடவிடாதீர்கள் என்று இவர்கள் சொல்லக்கூடும். சிங்களவர்களுக்கு கோபம் வரும் என்பதற்காக நாம் நமது உரிமைகளுக்காக சாத்வீகவழியில் போராடாமல் கைகட்டிக் கொண்டு இருக்க முடியாது"

என்பது தந்தை செல்வாவின் அறிவுரை. ஆனுல் தலைவர் அமிர்தலிங்கமோ சிங்கள வன்முறையைக் காட்டித் தமிழர்களைப்பயமுறுத்துகிருர்,

> 'வன்முறைப் போராட்டம் பயனளிக்காது; அதனுல் தமிழ் மக்களின் இலட்சியங்கள் கைகூடப்போவதில்லை. மாருகஎமக்கு இருந்து வரும் உலக அனுதாபத்தைக் கூட இது உருக்குலைத்து விடும்"

என்று கூறுகிற கூட்டணியின் தலைமை—

> "சாத்வீகப் போராட்டமும் சரிப்பட்டு வராது" என்றும் கூறிவிட்டது.

வன்முறையும்தவறு —சாத்வீகப்போராட்டமும் சரிவராதென்ருல்... தமிழீழ விடுதலையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எவ்வாறு வென்றெடுக்கப்போகிறது? அதற்கானவேலைத் திட்டமென்ன? நாடாளுமன்றத்திலே வெறும் கூப்பாடு போடுவதனுல் மட்டும் வெள்ளித் தட்டிலேவைத்து ஈழம் கிடைத்துவிடப்போகிறதா?

இதில் இன்னும் ஒருவேடிக்கையென்னவென்ருல் சாத்வீகப்போராட்டம் நடத்தினுல் வடக்கிலும்தெற்கிலும் வன்முறை வெடிக்கும் அதனுல் இனத்துக்குப்பேரழிவுஏற்படும் என்று கூறியதலைவரே கூட்டணியின் பொதுச் சபையில்—

> "கூட்டணி சமர்ப்பித்த ஐந்து கோரிக்கைகளில் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட நான்கு கோரிக்கைகளையும் நியாயமானகால எல்லைக்குள் நிறைவேற்றத்தவறினுல் கூட்டணி சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தும்"

என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது தான். குறிப்பிட்டகால எல்லைக்குப்பின் சாத்வீகப்போராட்டம் நடத்தினுல் அப்போது வடக்கிலும் தெற்கிலும் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட மாட்டாதா? தமிழர்களுக்குப் பேரழிவு ஏற்படாதா?

இவையெல்லாவற்றையும்விட யாழ் வன்செயலினுல் திடீரென எழுந்த இந்த 4 கோரிக்கைகள்தாஞு நமது மக்களின் இலட்சியம்? சுதந்திரதமிழ் ஈழத்தை நிறுவும் போராட்டமன்ருே நாம் மேற்கொள்ளவேண்டிய தர்மயுத்தம்? அதுவன்ருே மக்கள் ஆணை? அதற்காகவன்ருே இத்தனைகாலமும் ஏராளமான இளைஞர்கள்தம்உயிர்களை அர்ப்பணித்தனர்? சிறைக்குள் வாடினர்—வாடுகின்றனர்! வெளிநாட்டு தமிழீழ விடுதலை இயக்கங்கள் தமிழீழப் பிரகடனத்துக்கு நாள் குறித்தன?

இவற்றையெல்லாம் மறந்து சிறீலங்கா நாட்டின் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு நம்மை அடக்கியாளும் அரசுக்கு ஆலோசனை கூறும் விசுவாசமுள்ளஎதிர்க்கட்சியாகப் பணிபுரியவா கூட்டணியை நாம் தேர்ந்தெடுத்தோம்? தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதுபோல தமிழீழ மீட்புக்கான செயல் திட்டங்களில் ஈடுபடாமல் சிறீலங்கா அரசிடம் ஐந்துகேட்டுநாலும்பெறுவதும். நாலுதராவிட்டால் போராட்டம்என்று புதுக்கதை கூறுவதும், உண்மையில் விடுதலைத்தாகம் கொண்டவர்களின் நெஞ்சை அணு அணுவாக அரித்துக் கொண்டிருக்கிறது. இதைத்தவிரவேறு எதை எழுதுவேன்?

உன் அன்புத்தோழன்

தோ. லவ்மகேசன்

# விடுதலைக்கு தேவை வேலைத் திட்டமே!

யாழ்ப்பாணத்தில் 1981மே 31ஆம் திகதி தொடக்கம் யூன் 8ஆம் திகதி வரை ஆயுதப் படையினரால்கட்டவிழ்த்துவிடப்பட்டகாட்டுமிராண்டித்தனமான கொலை தீவைப்பு தாக்குதல்போன்ற மிலேச்சத்தனங்களை ஆட்சேபித்தும் இதையொட்டிஐந்து அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யூன் 9ஆம் நாளிலிருந்து நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றுவதில்லையென்றுஅறிவித்துவிட்டு இதுகாலவரை பகிஷ்கரிப்பிலீடுபட்டிருந்தார்கள்.

நவம்பர் முதலாம் திகதி நல்லூரில் கூடிய கூட்டணியின் பொதுச்சபை நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக்கைவிடுவதென்று ஏற்கெனவே நாடாளுமன்றக்குழுவும் செயற்குழுவும் எடுத்திருந்த தீர்மானத்தை முறையேற்றுள்ளது,

கூட்டணியின் பொதுச்சபை நாடாளுமன்றப்பகிஷ்கரிப்பைக் கைவிடுவதா அல்லது தொடருவதா என்பது குறித்து ஆராய்வதற்காக 1.11.81இல் நல்லூரில் பொதுச்சபை கூடும்என்றேஅறிவிக்கப்பட்டிருந்தது: ஆயினும் அதேநாளில் (1-11-81) கொழும்பிலிருந்து வெளிவந்தஉபாலி முதலாளியின் புதியஆங்கில வார ஏடான 'ஐலண்ட்' (THE ISLAND) தனது தலைப்புச் செய்தியாக "TULF MPS DECIDE TO RETURN" [த, வி. கூ. எம்.பீக்கள் திரும்பிவர முடிவு செய்து விட்டார்கள்] என்று வெளியிட்டிருந்தது, யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை கிடைத்த இப்பத்திரிகை கொழும்பில்இதற்கு இரண்டுநாட்களுக்கு முன்னமேயே அச்சிடப் பட்டிருக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் தமிழ் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு நாடாளுமன்றப்பகிஷ்கரிப்பைக்கைவிடத் தீர்மானித்துவிட்டதாகக் கூட்டணியின் செயலாளர் நாயகம்திரு. அப்பாபிள்ளைஅமிர்தலிங்கம் 'ஐலண்ட்' இதழுக்கு நேற்றுத் தெரிவித்ததாக அச்செய்தியை எழுதிய யாழ்ப்பாண நிருபர் ரவீந்திரன் காசிநாதர் குறிப்பிட்டிருக்கிறார். எனினும் 180பேர்கொண்ட பொதுச் சபைக்கு வெறும் சம்பிரதாய முறையேற்புக்காக இத்தீர்மானம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையேகூட்டணியிலுள்ள உச்ச அதிகாரசபை என்று கூறப்படுகிறது-அச்சபையில்தமது கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னமே பத்திரிகை மூலம் நாடாளுமன்றப்பகிஷ்கரிப்பைக் கைவிடுவதற்கு ஆகரவான தமது கருத்தைப் பகிரங்கப்படுத்திவிட்டார் கூட்டணியின் செயலாளர் நாயகம். இது கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அமைந்ததுதானா என்பதைச் சிந்தித்துப்பார்க்கும் பொறுப்பைக் கட்சி உறுப்பினர்களுக்கே விட்டு விடுகிறோம்.

ஆனால் இவ்வாறு தலைவர்கள் தான் தோன்றித்தனமாக நடப்பது இதுவே முதல் தடவையல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படை இலட்சியமான சுதந்திரஇறைமையுள்ள தமிழ் ஈ மீட்புக்கு மட்டுமே மக்களிடம் ஆணை பெற்ற கூட்டணித் தலைவர்கள் அதிகாரநிர்வாகப்பரவல்—மாவட்ட அபிவிருத்திச்சபை சம்பந்தமாக சிறீலங்கா ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவில் கூட்டணிப்பிரதிநிதியை இடம் பெறச் செய்வதா இல்லையா என்பதையிட்டு கூட்டணியின் பொதுச்சபையைக் கலந்தாலோசித்து அதன்பின் முடிவு எடுக்கவில்லை. முதலிலே தமக்குள் முடிவுசெய்து கலாநிதி நீலன் திருச்செல்வத்தை கூட்டணிப் பிரதிநிதியாக ஆணைக்குழுவிலேநியமித்து விட்டுத்தான் அதன் பின் முறையேற்புக்காக (RATiFiCATiON) பொதுச்சபையின் முன்னால் வந்தார்கள்.

இதுபோலவே அபிவிருத்திச்சபைகளை ஏற்பதாகவும் ஆதரித்து வாக்களிப்பதாகவும் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் உறுதியளித்து விட்டுத்தான்.அதன்பின் பொதுச்சபையைக் கூட்டிப் பல்வேறுசாட்டுக்களையும் சமாதானங்களையும் கூறி அதை முறையேற்க வைத்தார்கள்.

இப்படித்தான் கூட்டணிக்குள் 'ஜனநாயகம்'இப்போது வளர்ந்து வருகிறது.இதுஒருபுறமிருக்கட்டும்.

கூட்டணி பா.உக்களின் நாடாளுமன்றப்பிரவேசத்தை அரசாங்கமும் அரசுசார்பு ஏடுகளும் பெருமகிழ்வோடு வரவேற்றுள்ளன. அரசின் ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் முக்கியத்துவம்கொடுத்து இச்செய்தியைப் பறைசாற்றியது, இதிலிருந்தேஇதில்யார் வெற்றிபெற்றுள்ளனர் என்பது துலாம்பரமாகிறது.

தமது நாடாளுமன்றப் பிரவேசத்தின் மூலம் கூட்டணிப்பா.உக்கள் தமதுபதவி பறிபோகாது பத்திரமாகப் பாதுகாத்துக்கொண்டுள்ளனர். திரு. அமிர்தலிங்கத்தின்எதிர்க்கட்சித்தலைவர் என்ற பதவியும்பாதுகாக்கப்பட்டுவிட்டது.

## எண்ணம்

ஆனால் தமிழீழ விடுதலைப் போராளிகளைப் பொறுத்தவரையில்— தமிழ் மக்களைப் பொறுத்தவரையில்—கூட்டணி பா.உக்கள் நாடாளுமன்றத்தைத் தொடர்ந்துபகிஷ்கரித்திருப்பார்களானால், ஒத்துழையாமை இயக்கம்தொடர்ந்திருக்கும். 1982தமிழீழ அரசுப் பிரகடனத்துக்கு அது வழி சமைத்திருக்கும்.

கூட்டணியினர் நாடாளுமன்றம் சென்று அங்கு வெறுமனே பேசிக் கொண்டிருப்பதால், தமிழ்மக்களுக்கு புதிதாக என்ன நன்மைவந்துவிடப்போகிறது? கடந்த 30, 40 ஆண்டுகளாகச்சொல்வன்மைமிக்கபெருந்தலைவர்கள்பலர் பேசாத பேச்சுக்களா?

காலஞ்சென்ற அமரர் கதிரவேற்பிள்ளை அவர்களைப்போல— ஆண்டுக்கொருமுறை பேசினாலும்—அளவோடு பேசினாலும்—நறுக்குத் தெறித்தாற் போல—இலங்கைத்தீவு இரண்டு நாடுகளைக் கொண்டது,இதில் எமது தமிழீழம் தனிநாடு:எம்மை எமது பாட்டில் போகவிடுங்கள்.சிறீலங்காவும் தமிழீழமும் இருநட்பு நாடுகளாக—நல்ல அயலவர்களாக விளங்கட்டும் என்றவாறு பேசினாலாவது அதில் இலட்சிய உறுதி தொனிக்கும்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும்அநியாயங்களும் துன்புறுத்தல்களும் கொடுமைகளும் அதிகாரபூர்வ ஏடான நாடாளுமன்ற ஹன்சார்ட்டிலே பதியப்படவேண்டும். அப்போதுதான் வெளிநாட்டார் அதை நம்புவார்கள் அதற்காகவே நாடாளுமன்றம் செல்கிறோம் என்பது செயலாளர் நாயகத்தின் விளக்கம்.

இதுதான் சரியான காரணமென்றால் கூட்டணிபா.உக்கள் கடந்த ஆகஸ்ட்டிலேயே தமது பகிஷ்கரிப்பைக்கை விட்டுவிட்டு நாடாளுமன்றம் சென்றிருக்க வேண்டும், இரத்தினபுரியில் எம்பிலிப்பிட்டியாவில்பலாங்கொடையில் காவத்தையில் மலையகத் தமிழர்கள் உயிரோடு எரிக்கப்பட்டதையும் கற்பழிக்கப்பட்டதையும், கொள்ளையிடப்பட்டதையும் கொலை செய்யப்பட்டதையும் புள்ளிவிபரங்களோடு நாடாளுமன்றத்திலே எடுத்துரைத்திருக்க வேண்டும். அப்போது அதைச் செய்யத் தவறியவர்கள் பதவிக்காலம்முடியப்போகிறதென்றதும்'பட்ஜட்'விவாதத்தில் பேசப்போகிறோம்என்றுகூறிக்கொண்டுபாராளுமன்றப்படியேறிவிட்டார்கள்.

ஆயினும் கூட்டணி பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தகாலத்தில்,இடம்பெற்ற இனக்கலவரக்கொடுமைகள் உலகின்கண்களுக்குத்தெரியாமல்போய்விடவில்லை, உலகப்பத்திரிகைகள் பலவும், தமிழர்கள்கொடுமைப்படுத்தப்பட்டதை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடவே செய்தன. ஹன்சார்ட்டைப் பார்த்து அல்ல...தமது சிறப்பு நிருபர்களை இங்கு அனுப்பி செய்திகளை சேகரித்தார்கள், இங்கு வந்த பத்திரிகையாளர்களும் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பிலீடுபட்டிருந்த கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் கருத்தை அறியாமல் சென்றதும் இல்லை.

கூட்டணி சிறீலங்கா நாடாளுமன்றம்செல்வது பற்றியோ அல்லது அதைப் பகிஷ்கரிப்பது பற்றியோ நமக்கு எதுவித அபிப்பிராயமும்கிடையாது. ஏனெனில் இன்னமும் அர்த்தமான ஜனநாயக நாடாளுமன்றம் அமைப்பில்கூட்டணிக்குநம்பிக்கையிருக்கலாம்.ஆயின் எமக்கு அறவேநம்பிக்கைகிடையாது, நாடாளுமன்ற மேடை முழக்கங்களின் மூலம் நமது அடிப்படை இலட்சியமான சுதந்திரத் தமிழ் ஈழத்தை அடைந்து விடவும் முடியாது.

**தமிழ் மக்களுக்கு இன்று தேவைப் படுவது அறிக்கைகளும், பேச்சுக்களும், வாதங்களும் எதிர்வாதங்களும்அல்ல; சுதந்திர இறைமையுள்ளசோசலிசத் தமிழீழ அரசை மீள்வித்துப்புனரமைப்பதற்கு சரியான ஒருபுரட்சிகரமானவேலைத்திட்டமும் அதைச் செயற்படுத்துவதற்குறுதியான உள்ளமும்,கடமையுணர்வும், விடுதல்அறியா விடுதலைவேட்கையும் கொண்ட தேசத் தொண்டர்களுமே தேவை.**

## முடவனுக்கு சறுக்கியது சாட்டா!

உலக வங்கி உதவித் திட்டத்தின்கீழ் 10 இலட்சம் ரூபா செலவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கத்திட்டமிடப்பட்டிருந்தபொறியியல் சேவை நிலையம், இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு மாற்றப்படவுள்ளது.

இதற்குக் கூறப்படும் நொண்டிச்சாட்டு யாழ்ப்பாணத்தில் காணி கிடைக்கவில்லையென்பதுதான்,

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையோ, மாநகர சபையோ இதில் தலையிட்டு, தேவையான காணியைப் பெற்றுக்கொடுத்துமேற்படி நிலையத்தை யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே எடுத்துச் செல்ல விடாது தடுத்து நிறுத்த வேண்டும். முடியுமா இவர்களால்?

# பாணந்துறையில் தமிழ்க் கடைக்கு குண்டர்கள் தீவைத்தனர்!

அக்டோபர் 27 ஆம் திகதி இரவுஒன்பதுமணியளவில் பாணந்துறையில்பிரபலமான கடையான "சுப்பிரமணியம் அன் கோ" என்ற கடையும், கடையின் களஞ்சியமும் யூ.என்.பி. குண்டர்களினால் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதமேற்படுத்தப்பட்டது, கடையின்கூரை, பாணந்துறை மார்க்கட் சந்தியில் பிரதான வீதியில் எரிந்து வீழ்ந்தது. கடையின் களஞ்சிய சாலை முற்றாகவே சாம்பலானது. இதனால்இக்கடையை அடுத்திருந்தஅநேககிங்களக் கடைகளும்சேதமடைந்தன.

எரியுண்ட 'சுப்பிரமணியம் அன் கோ' என்ற கடை, ரேடியோ, பைசிக்கிள், மற்றும் அவற்றின் உதிரிப் பொருட்கள் விளையாட்டுப் பொருட்களுக்கு பெயர் பெற்ற கடையாகும்.

26 ஆம்திகதிஇக்கடையை எரிப்பதற்கு முயற்சிக்கப்பட்டபோதும், மயிரிழையில் இது தவிர்க்கப்பட்டது. இத்தீவைப்புக்குப் பொறுப்பான குண்டர்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கும் போது, இரவும் பகலும் நகரைப் பாதுகாக்கும் பொலீசார், இவ்வாறான சேதம் நடைபெறும்போது என்ன செய்து கொண்டிருந்தனர் என்று பலரும் ஆச்சரியப்படுகின்றனர்.

இச்சம்ப[illegible]வத்துக்குப் பல தினங்களுக்கு[illegible]முன்பே பாணந்துறையிலிருந்த 20 தமிழ்க் கடைகளும் மூட[illegible]ப்பட்டுவிட்டன. சமான்ய [illegible]ண்களும், பெண்களும் இம்மாதி[illegible]ச்சம்பவங்களுக்கு ஆதரவளி[illegible]ல்லை. கொலைகாரச் செ[illegible]ற கள்ளுக்குப் பி[illegible] பொலீசாரின் பாணந்துறை[illegible] செயற்படும் உதவியுடன், யூ.என்.பி. குண்டர் படையால் ஏனைய தமிழ்நிறுவனங்களுக்கும் அ[illegible]ச்சுறுத்தல் உண்டு.

பச்சை இன[illegible]வெறி பிடித்த பாணந்துறை எம்.பி. திரு. நெவில் பெர்னாண்டோ, யூ.என்.பி.யில் இருந்து வெளியேற்றப்பட்டபோது, தன்ன[illegible]னியனாக இருந்தாலும் தமிழர்களுக்கு எதிராகப் போராடப்போவதாகதனது ஆதரவாளரிடம் கூறியுள்ளார். அவருடையஇனவாத நடவடிக்கைகளை சீர்தூக்கிப் பார்த்தால், இம்மாதிரியான அழிவு வேலைகளின் பின்னணி விளங்கும். இவை தற்செயலாகநடந்தவையென்றுகூறிவிட முடியாது.

வரலாற்றில் முன்எப்பொழுதுமில்லாத அளவில், உயிர் வாழ்வே ஊசலாடும் இச்சமயத்தில், தங்கள் கொலைகாரர்களுடன் தமிழர்விடுதலைக் கூட்டணியினர், தமிழரின் மீட்சிக்காக சமாதானம் பேசுகின்றார்களாம். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களும் விடுதலைப்போராளிகளும், மேற்படி கூட்டணி— யூ.என்.பி. பேச்சுவார்த்தைகளை, தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் சந்தர்ப்பவாதப் பேச்சுவார்த்தையென்றே கருதுவார்கள்.

**இத்தகவலை ஸ்பார்ட்டாசிஸ்ட் லீக் இலங்கைக்கிளையைச் சேர்ந்த திலக் பெர்ணண்டோ சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளார்.**

* * *

## பண்டாரவளையில் கடைகள் தீக்கிரை

பண்டாரவளையில் தமிழர்களுக்குச்சொந்தமான ஐந்து கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன, இது பற்றி பொலீஸ் விசாரணை நடைபெறுகிறது.

## இராணுவத் தாக்குதல்

பண்டத்தரிப்பைச்சேர்ந்த கார் உரிமையாளர் பொன்னம்பலம் ராஜகுலேந்திரன் (35 வயது) இராணுவத்தினரால் தாக்கப்பட்டு யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்தஞா.ஞானராசாஎன்பவரதுவீடு24-10-81 இல்கடும்சோதனைக்குட்படுத்தப்பட்டது. ஞானராசாஎங்கே யென்றுகேட்டு, அவரதுதகப்பனரைத் தாக்கியுள்ளனர் இராணுவத்தினர்.

குட்டிமணி கைதுசெய்யப்பட்டபோதுஞானராசாவும் கற்கோவளத்தில்கைதுசெய்யப்பட்டு பின் 5-4-81 இல் விடுதலை செய்யப்பட்டவராவர்.

கண்டிறோட்செம்மணியில் யாழ் வர்த்தகரான சுப்பிரமணியம் இராசையா தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்புகையில் 28-10-81 இரவுஇராணுவத்தினரால் மோசமாகத் தாக்கப்பட்டார். அவரது முன்பல் இதனால் உடைந்தது.

## பா.உ. வின் செயலாளர் மீதும் தாக்குதல்

முல்லைத்தீவு பா.உ. திரு. சே.மா. செல்லத்தம்புவின் செயலாளர் திரு வே. செந்தில்நாதன் சைக்கிளில் செல்கையில் முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் தாக்கப்பட்டார். அவரையும், அவருடன் சென்ற முடியப்பு என்பவரைக் காலாலும் கையாலும் தாக்கியும், சப்பாத்துக்காலால் மிதித்தும்கொடுமைப்படுத்தினர். அவர்களிடமிருந்த டோர்ச் லைட்டையும் பறித்துச் சென்றனர், இதே தினத்தில் (25.10.81) முல்லைத்தீவில் பல பகுதிகளிலும், கிராமங்களிலும் இராணுவ வெறித் தாக்குதல் இடம்பெற்றது. யாழ்ப்பாண இளைஞர்களை விசேடமாகத் தேடித் தேடித் தாக்கினார்களாம்.

## பண்டத்தரிப்பில் கடையுடைப்பு

பண்டத்தரிப்பில் பேக்கரி ஒன்றும் ரொட்டிக் கடையொன்றும் டிறக்கில் வந்த இராணுவத்தினரால் 31-10-81 இல்அடித்துடைக்கப்பட்டன. ஏனையகடைகள் பூட்டப்பட்டிருந்த போதும் அவை மீதும் தாக்குதலிடம் பெற்றன.

மாதகலில் வயோதிபத் தமிழ்மூதாட்டிநடத்திவந்த ஒரு சிறுகடையும் தாக்குதலுக்கிலக்கானது. அச்சமயம் கடையில் நின்றஇளைஞர்கள் பொருட்கள் வாங்க வந்தோர் அனைவரும் தாக்கப்பட்டனர்.

## காரைதீவில் அட்டகாசம்

தமிழீழத்தின் தென்பகுதியிலுள்ள காரைதீவில் ஆயுதப்படையினரால் ஏழைத் தமிழ்த் தொழிலாளியான சின்னத்தம்பிசெல்லத்துரை சுட்டுக் கொல்லப்பட்டதுமன்றி அவரதுகுடும்பத்தினரும் பிள்ளைகளும் இராணுவ இம்சைக் குள்ளாக்கப்பட்டனர். தார் வீதியை குனிந்து நக்கும்படி மக்கள் பணிக்கப்பட்டனர். சைக்கிள்களைத் தலையில் வைத்துச் சுமந்து செல்லுமாறு இளைஞர்கள் இம்சைப்படுத்தப்பட்டனர்.

## பெண்கள்பட்டபாடு

நள்ளிரவில் வீடு வீடாகச் சோதனையென்ற பெயரால் பெருந்தொகையான இராணுவத்தினர் அனுமதியின்றித் திடுமென்றுவீட்டுக்குள் நுழைந்ததைக் கண்டு அஞ்சிய தமிழ்ப் பெண்கள் நால்வர் பரபரப்புடன்மதிலேறி அடுத்த வளவுக்குள் குதித்த போது, புதிதாகக் கட்டப்பட்ட மதில் இடிந்துவிழுந்து காயத்துக்குள்ளாகி யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் 28-10-81 இல் நடைபெற்றது.

## வர்த்தகர்கள் புகார்

தீபாவளிக்குமுதல் நாளிரவு(25-10-81 இரவு) யாழ்ப்பாணத்தில் தாக்குதலுக்குள்ளான மூன்றுகடைகளின் உரிமையாளர்களும் சீருடை அணிந்த இராணுவத்தினரே தமது கடைகளைத் தாக்கிச் சேதப்படுத்தியதாகப் பொலீசில் முறைப்பாடுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆரியகுளச் சந்தியிலுள்ள கடையொன்றும் இத்தாக்குதலின்போது சேதமுற்றது. இத்தேநீர்க் கடையைச் சேர்ந்த இரத்தினசாமி கலியபெருமாள் என்பவர், பொலீசாருக்குக் கொடுத்துள்ள முறைப்பாட்டில், சுமார் பத்துப்பேர் கொண்ட இராணுவவீரர்கள் குழுவொன்று ஆயுதபாணிகளாக வந்து தனது கடையைத் தாக்கியதாகவும், 25ரூபாபெறுமதியான சிகரெட்டுகளையும், லாச்சியிலிருந்த 500 ரூபா ரொக்கப் பணத்தையும், தாக்குதல் நடத்திய இராணுவத்தினர் எடுத்துச் சென்றதாகவும், இத்தாக்குதலினால் தமக்கு 25ஆயிரத்து3715ரூபாநட்டமேற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

யாழ்பிரதானவீதியில்தாக்குதலுக்குள்ளான தேநீர்க் கடையொன்றைச் சேர்ந்த செய்யத்முகம்மத்என்ற முஸ்லிம்வியாபாரி, பொலீசாரிடம்செய்து கொண்ட முறைப்பாட்டிலும்' சீருடையில் வந்த பத்துக்கு மேற்பட்ட ஆயுதபாணிகளான இராணுவத்தினரே தமது கடைக்குள் புகுந்து போத்தல்களை அடித்துநொறுக்கியதாகவும், இதனால் தமக்கு ரூபா11000 சேதமேற்பட்டதென்றும் தெரிவித்திருக்கிறார்.

பிரதான வீதியிலுள்ள சவப்பெட்டி விற்பனை செய்யும் கடையைச் சேர்ந்த நல்லையா கிளின்ரன் (வயது 24) என்பவரும், பொலீசாருக்குக் கொடுத்துள்ள முறைப்பாட்டில், மஞ்சள் பச்சை நிற ஜீப்புக்களில் சீருடையுடன்வந்த இராணுவத்தினரே தமது கடையையும் தாக்கியதாகவும் இதனால் தமக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபா நட்டம் என்றும் கூறியுள்ளார்!

# தமிழ் அமைச்சருக்கும் தனிச் சிங்களக் கடிதம்

தமிழ் மொழியைத் தேசிய மொழியாக்கி விட்டோம்— மொழிப் பிரச்சினையைத் தீர்த்து விட்டோம்— என்றுஉலகெங்கும்பறைசாற்றி தமிழ் மொழிஅமுலாக்கலுக்கென்று அமைச்சர் ஒருவரையும் நியமித்துவிட்டதாகத் தம்பட்டமடித்து வரும் யூ.என்.பி. அரசின் திணைக்களங்களிலிருந்து தமக்கும் கூட இன்னும் தனிச் சிங்களத்தில் கடிதங்கள் வந்து கொண்டிருப்பதாக வெட்கமின்றி வெளிப்படையாகக் கூறியிருக்கிறார் தமிழ் அமைச்சர் ஒருவர்.

அவர்தான் உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் கல்குடா நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கணபதிப்பிள்ளை வில்லியம் தேவநாயகம் அவர்கள்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில்அரசாங்க அதிபர்களுக்கான மாநாடு 30-10-81 இல் நடைபெற்ற போது, அம்மாநாட்டில்திரு. தேவநாயகமும் கலந்து கொண்டு உரையாற்றினார்,

இம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய திருகோணமலைஎம்.பி.திரு.இரா.சம்பந்தன், தனக்கு அரசாங்கத் திணைக்களங்களிலிருந்து தொடர்ந்தும் தனிச் சிங்களக் கடிதங்கள்வந்துகொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் திரு.தேவநாயகம் தமக்குக் கூடத் தனிச் சிங்களக்கடிதம்வருவதாகக் குறிப்பிட்டு, தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் படுத்தத் தவறும் அரசாங்க அதிகாரிகளுக்கு தண்டனை வழங்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத்தெரிவித்தார்.

ஆனால் எத்தகைய தண்டனையென்பதை அமைச்சர் குறிப்பிடவில்லை.

# 80,000 மக்களுக்கு சுதந்திர நாடு

சுமார் 80,000 மக்களே வாழும் அன்ரிகுவா பார்புடா தீவுகள் 1.11.81 இல் சுதந்திர இறைமையுள்ள நாடாகிவிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு, 249 ஆண்டுகளின் பின்னர் அன்ரிகுவாமக்களின் சுதந்திரக்கொடிஉயர்த்தப்பட்டது. இங்கோ தமிழீழத்தில் நாம் 40 இலட்சம் மக்கள்சுதந்திரமின்றி இன்னும் அடிமைகளாக வாழுகிறோம். 80,000 மக்கள் சுதந்திரமாக வாழும்போது, தனிநாடாக தலை நிமிர்ந்து நிற்கும் போது 8000 சதுரமைல்களையும் 40 இலட்சம் மக்களையும் கொண்ட தமிழீழம் ஏன் தனது இறைமையையும் சுதந்திரத்தையும் அரசையும் மீளப் பெற முடியாது? ஏன் தனது சுதந்திரக் கொடியை உயர்த்த முடியாது?

# நியமனம்பெறும் 5400 ஆசிரியர்களில் 1201 பேரே தமிழர்!

அடுத்த ஆண்டு நியமனம் பெறவிருக்கும் 5400ஆசிரிய நியமனங்களில் 1201 பேர் மட்டுமே தமிழர்கள். அதேசமயம் யாழ் மாவட்டத்தில் மட்டும் 2000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

# சாத்வீக போராட்டம் நடத்தினால் வடக்கிலும் தெற்கிலும் வன்முறை வெடிக்கும்!

## கூட்டணிப் பொதுச்சபையில் அமிர்தலிங்கம் பேச்சு

"சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடத்தியதுபோல இன்றைய அரசுக்கு எதிராகச் சாத்வீகப் போராட்டம் நடத்தினால்— எமது போராட்டம்தொடங்கிய 24 மணி நேரத்தில் வன்முறைச் சம்பவங்கள் தெற்கில் மட்டுமல்ல—வடக்கிலும் தலைதூக்கும். இதனால் எமக்குப் பேரழிவே ஏற்படும். பயன்கிடைக்காது"

இவ்வாறு நல்லூர் த.வி. கூட்டணிக்கிளையின் செயலகத்தில் 1.11-81 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற த.வி. கூட்டணியின் பொதுச்சபைக்கூட்டத்தில் 75 நிமிடம்வரை பேசிய கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

2.11.81 வீரகேசரியிலிருந்து அவரது உரையைஅப்படியே இங்கு தருகிறோம்—

இங்கு பேசிய பலரும் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைகைவிடவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்கள். ஆனால் அவர்களால் மூன்றுவெவ்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

பாராளுமன்ற பகிஷ்கரிப்பைகைவிட்டு பாராளுமன்றம்சென்று நிலைமையை விளக்கி அறிக்கைவிடவேண்டும்என்று சிலரும்:

பாராளுமன்றத்துக்கு கறுப்புப்பட்டி அணிந்துசெல்ல வேண்டும் என்று வேறு ஒரு சிலரும்,

பாராளுமன்றத்துக்குசெல்லும் அதேவேளை தமிழீழப் போராட்டத்தை வெளியில் நடத்த வேண்டும் என்று சிலரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

நாம் பாரளுமன்ற பகிஷ்கரிப்பைக்கைவிடத்தொடங்கிய அன்று அதாவது ஜூன் 9ஆம் திகதி இருந்த நிலை வேறு இன்று இருக்கும்அரசியல் சூழ்நிலைவேறு. எனவே அன்றைய நிலைமைக்கேற்ப எடுத்த நடவடிக்கையை இன்றும் கடைப் பிடிக்க வேண்டும்என்பதில்லை. மாறுபடும் சூழ்நிலைக்கேற்ப நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பகிஷ்கரிப்பை நடத்திக் கொண்டு அரசுத் தலைமைப் பீடத்துடன் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது என்று சிலர் கேட்கின்றனர்,

நாம் எதுவித சமரசப் பேச்சுக்களிலும் ஈடுபடவில்லைஎமது இலட்சியத்தை அடையவும் இல்லை மாறாக அவ்வப்போது எழும் நம்மக்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடும் முகமாகவே பேசுகிறோம்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்- கடந்த வன்செயலின்போது மலையகத்தில் கி.மாவைச் சேர்ந்த பொற்தொழிலாளர்ஒருவர் பலியானார். அவரது சடலத்தை இராணுவத்தினர்கொடுக்க மறுத்து விட்டனர். இது விஷயம் எனது கவனத்துக்குகொண்டுவரப்பட்டது ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு அந்த அன்பரின் உடலைப்பெற்றுக் கொடுத்தேன்.

எமது இன்றைய பேச்சுக்களும் இந்த வகையானவையாகவே இருக்கின்றன.

தமிழ் ஈழம்பற்றி ஜனாதிபதியிடம் பேசினால் என்ன என்றும் கேட்கிறார்கள். கடந்த தேர்தலின்போதே நாம் எமது தமிழ்ஈழக் கொள்கையை முன்வைத்துவிட்டோம்: எமது முடிவும் அதுவாகவே இருக்கிறது அரசுதான் இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### சர்வதேசவிசாரணை

யாழ். வன்செயலைஅடுத்து நாட்டின் வேறுபக்கங்களில் பல வன்முறைகள் நடந்துவிட்டன,எனவே யாழ் வன்செயலுக்கென சர்வதேச விசாரணைக்கமிஷன் அர்த்தமற்றதாகிவிடுகிறது இ.தொ.கா. உட்பட பல்வேறுதொழிற்சங்கங்கள் நாட்டில் பரவலாக நடந்த வன்செயல்கள்பற்றி விசாரிக்க சன்சோனி கமிஷன் போன்று ஒரு கமிஷனை நியமிக்குமாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளன. எனவே எமது இந்தக் கோரிக்கை பெயரளவில் பயன்தரும்சாத்தியம்'உண்டு எங்களைப் பொறுத்தமட்டில் யாழ் வன்செயலுக்கு பொலிசாரே காரணம் என்று அரசு ஒத்துக்கொண்டு விட்டது,

வன்செயலில் ஈடுபட்டதாக கருதப்படும் பொலிசாருக்கு எதிராக நீதிமன்றம் மூலம்நடவடிக்கைஎடுக்கப்படவிருக்கிறது. நீதிமன்றத்துக்கு இந்த விவகாரம் வரும்போதுசம்பந்தப்பட்ட பொலிசார் வேலையிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள்,

### ஊர்க்காவல் படை

ஊர்க்காவல்படைகளைநியமிப்பது தொடர்பாக அரசு கொள்கையளவில்இணக்கம் தெரிவித்துள்ளது.இதுநடைமுறைக்கு வர காலதாமதமாகலாம் ஆயினும் நாம் அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

### வன்செயல் நஷ்டஈடு

வன்செயல் நஷ்டஈடுதொடர்பாகநடைபெற்று வரும் லயனல் பெர்ணாண்டோ குழு விசாரணையை சுன்னாகப் பகுதிக்கும் விஸ்தரிக்குமாறு நாம் கோரியுள்ளோம். இது பற்றி ஜனாதிபதியிடம் இந்த வாரம் பேசவிருக்கிறோம்.

### தீவிரப் பேச்சு

தீவிரமாகப் பேசும் தம்பிமாருக்கும்நான் இங்கு ஒன்றைசொல்லி வைக்க விரும்புகிறேன். காலத்துக்கு ஏற்ப நாம் எமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், இடம், பொருள், ஏவல்களை பார்த்து செயற்பட வேண்டும். அன்று இருந்த நிலை வேறு.இன்றுஉள்ள நிலைவேறு

சுதந்திரக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடத்தியது போல இன்றைய அரசுக்கு எதிராக சாத்வீகப்போராட்டம் நடத்தினால் எமது போராட்டம் தொடங்கிய 24மணிநேரத்தில் வன்முறை சம்பவங்கள் தெற்கில்மட்டுமல்ல வடக்கிலும் தலைதூக்கும்,

இதனால் எமக்குபேரழிவே ஏற்படும் பயன் கிடைக்காது.

இன்றைய எமது நிலை பேச்சுபல்லக்கு தம்பிகால் நடை என்பதுபோலத்தான் இருக்கிறது எமது கட்சியின் தலைமையகம் எரிக்கப்பட்டது. புதியசெயலகம் ஒன்றை அமைக்கமுடியாத சூழ்நிலை.யாரும்கட்சி செயலகத்துக்கு வீடுவாடகைக்கு தருகிறார்கள் இல்லை. வீடு எரிக்கப்பட்டுவிடும் என்றுமக்கள் அஞ்சுகிறார்கள். இதனால் நாம்குளம் ஒன்றைதூர்த்தே கட்சியின் செயலகத்தை யாழ். நகரில்கட்டவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம்

### எதிர்க்கட்சித் தலைவர்பதவி

எதிர்க்கட்சித் தலைவர் பதவிகூட்டணிக்குகிடைத்த வரப்பிரசாரம் என்று கூறுகிறார்கள். இதுபற்றிநான் எதுவும்கூற விரும்பவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் கூறிவைக்கஆசைபடுகிறேன்

பாராளுமன்ற விவாதங்கள் பதியப்படும் ஹன்சாட்டில் இடம்பெறும் பேச்சுகளே இங்குள்ள நிலைமையை வெளிக்காட்டும்ஆதாரபூர்வஏடாகும் இங்கு வரும் வெளிநாட்டார்எங்கள் நிலைமைகளை 'ஹன்சாட்டை' பார்த்தே உறுதி செய்கிறார்கள்.

சமீபத்தில் நான் இந்தியா சென்றிருந்த போது எமது நிலைமைகளை அங்குள்ளபத்திரிகையாளர்களுக்குஎடுத்துச் சொன்னேன். அவர்கள்நம்பவில்லை.

'ஹன்சார்ட்' பதிவுகளை எடுத்துக்காட்டினேன்.பலன் மூன்று வாரம் தமது பத்திரிகையில் எங்களின் நிலைமைகளைகட்டுரைரூபத்தில்எழுதி அங்குள்ள மக்கள் மத்தியில் எழுச்சியை ஊட்டிவிட்டார்கள்.

எனவே பாராளுமன்ற விவாதங்களில் நாம் எமது பிரச்சினைகளை அவ்வப்போது முன்வைக்க வேண்டும்.

கடந்த மூன்று மாதகாலமாக இங்கு எவ்வளவோ தமிழ் மக்களுக்கு எதிராக நடந்துவிட்டன. அவையொன்றும் பாராளுமன்றத்தில் இடம் பெறவில்லை.

எதிர்வரும்வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது கிடைக்கும் சந்தர்ப்பத்தை இதற்கு பயன்படுத்தலாம்,

எமது ஐந்து கோரிக்கைகள் தொடர்பாக அரசு இப்பொழுது செயற்படுகிறது: இந்த செயல்எவ்வாறு உருப்படுகிறது, என்பதை பாராளுமன்றத்துக்கு போய்க் கொண்டு அவதானிப்போம். அவ்வப்போது நிலைமைக்கேற்ப எமது நடவடிக்கை அமையும்.

தலைவர் திரு.எம்.சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

'கூட்டணிஎம்.பிக்களாகிய நாங்கள் கடந்த மே- ஜூன் மாதங்களில்யாழ்பாணத்தில் நடந்த வன்செயல் சம்பவங்களை முன் வைத்துஐந்துஅம்சக் கோரிக்கைகளைஅரசிடம் விடுத்துபாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கத் தொடங்கினோம். எமதுமாவட்டங்களிலேயே தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லாதிருப்பதை முன் வைத்தே இந்த பகிஷ்கரிப்பைத் தொடங்கினோம். அதுதொடர்பாகஐந்துகோரிக்கைகளை அரசிடம் சமர்ப்பித்தோம்.

அரசாங்கஉயர்பீடம்எமது கோரிக்கைகளில் சிலவற்றைப் பரிசீலனைக்கு எடுத்து செயற்படத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் கூடுதலான தமிழ்ப் பொலிசாரே கடமையாற்ற அனுப்பப்படவேண்டும்என்ற எமது கோரிக்கை தொடர்பாக அரசுநடவடிக்கைஎடுத்துள்ளது:

சுமார் 40 சதவீத பொலிசார் தமிழர்களாகவேஇருக்கின்றனர். ஏனைய இடங்களுக்கும்தமிழ்ப்பொலிசாரை அனுப்பித்தர போதியளவு தமிழ்ப்பொலிசார்பொலிஸ் சேவையில் இல்லை,

இதனால்அரசாங்கம்முற்றுமுழுதாக அதாவது 75 சதவீதம் தமிழ்ப் பொலிசாரை வடக்கு,கிழக்குபகுதிகளுக்கு இடமாற்றம்செய்யமுடியாது திண்டாடுகிறது. இதற்கு மாற்றுவழி பொலிஸ்சேவையில்மேலும்பலதமிழ்ப்பொலிசாரைநியமிப்பதேஒரேவழி. அரசுக்குஇதனைஇடித்துரைக்கிறோம்.

வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடுவழங்குவது தொடர்பானவிசாரணைகள்நடைபெறுகின்றன. திரு. லயனல் பெர்ணாண்டோ தலைமையிலான குழு இந்த விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது:

எமது கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்குமளவுக்கு விஷயங்கள் இன்று நடைபெற்றுவருகின்றன.

### எதிர்க்கட்சித் தலைமையை இழக்க முடியுமா?

இந்த நிலையில்எமதுபாராளுமன்றபகிஷ்கரிப்பையிட்டு நாம் சிந்திக்கவேண்டியவர்களாகவிருக்கிறோம்.

நவம்பர் 6 ஆம் திகதி [illegible] மேல் நாம் பாரா[illegible] துக்குச் செல்ல[illegible]மன்றத் பாராளுமன்ற[illegible] திருந்தால் [illegible]த்தில் கூட்டணிக்கு உள்ள[illegible] அங்கத்துவம் தானகவே [illegible] இழந்துவிடும். இதனால் எமது இலட்சியப் பயண[illegible]த்தில் எதுவிததடங்கலும் ஏற்பட்டுவிடாது.

ஆனால், எ[illegible] இலட்சியத்தையிட்டு [illegible] வெளிநாடுகளில் பிரசாரம் செ[illegible]ய உதவும் எதிர்க்கட்சித் தலைவர்என்ற பதவி எங்களுக்குஇல்லாமல் போய்விடும்.

இப்பதவி எமக்கு காத்திராப் பிரகாரமாக கிடைத்தது- ஆனாலும் அந்தப் பதவியை பயன்படுத்தி நாம்எத்தனையோவிஷயங்களை சாதித்துள்ளோம்- பிற நாடுகளில் எமது நிலைமைகளை மற்றோர் அறியஇந்தப்பதவிதுணைபுரிந்துள்ளது. இவ்வரிய சந்தர்ப்பத்தை கைநழுவ விடுவதா? இதுதான் இன்று எம்முன் உள்ள பிரச்சினை.

பாராளுமன்ற பகிஷ்காரம் தொடர்பானதீர்மானத்தை கூட்டணியின் பாராளுமன்றக் குழுவே மேற்கொண்டு செயல்பட வேண்டுமென்று பொதுச் சபையினராகிய நீங்கள் அன்று எம்மிடம் பொறுப்பைத் தந்தீர்கள். அதன்படி நாம் கூடிப் பாராளுமன்றபகிஷ்கரிப்புமுடிவை எடுத்து செயல்படுத்திவருகிறோம்.

இன்று அந்த பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா? என்ற முடிவுக்கு நீங்கள் வரவேண்டும். இன்றைய அரசியல் சூழ்நிலையை நன்கு ஆராய்ந்து நல்ல தொரு முடிவை நீங்கள் எமக்கு அளிக்கவேண்டும்.'

இவ்வாறு திரு எம்.சிவசிதம்பரம் கூறினார்.

### போர்த்துக்கீய

—7-ம் பக்கத் தொடர்

அரசியல் ரீதியான சுதந்திர இறைமையுள்ள அரசை அவர் நிறுவவில்லை. ஆனால் தமிழ் பேசும் மக்களை ஒரு நாட்டினம் என்ற உணர்வு பெற வைத்தார் சுதந்திரத்திற்கு முன்னரோ பின்னரோ வந்த எந்தத் தமிழ்த் தலைவராலும் சாத்திய மற்றது என்று எண்ணப்பட்ட இதனைச்சாத்தியமாக்க திரு; செல்வநாயகத்தால் மட்டுமே முடிந்தது.

[தமிழாக்கம் — காங்கேசன்]

முற்றும்

### பத்திரிகைத் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 21.8.81 பிற்பகலிலிருந்து பத்திரிகைத் தணிக்கையை அரசாங்கம் அமுலுக்குகொண்டுவந்துள்ளது.

# போர்த்துக்கீயனிடம் இழந்த தமிழீழ அரசை மீள்விக்க வந்துதித்த தேசத் தந்தை செல்வா

## சிங்களவரோடு சேர்ந்து வாழ முடியாதென்பதே அரசியலில் அவர் கண்ட நிலையான தீர்ப்பு!



வரலாற்றின் மாபெரும் மனிதனான திரு.செல்வா பற்றி வரலாறு அளித்த தீர்ப்பு என்ன என்பதைஇனி எடுத்துரைப்பேன். நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல எல்லையற்ற அழிவையும் குழப்பத்தையும்நோக்கி அமிழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டியபொறுப்புத் தம்மைச் சார்ந்திருப்பதாகத் திரு. செல்வா எண்ணினார், அவர் தலைமைப் பதவியில் விருப்பமற்றவராக இருந்தார்.

அவரைப்பற்றி அரசியல் அமைச்சுப் பதவி என்ற தலைப்பில் சிலோன் ஒப்சேவர்—பிக்ரோறியல் (1963) ஏட்டில் மேவின் சில்வா என்ற புகழ்பெற்ற பத்திரிகையாளர் எழுதிய கட்டுரையைப் படித்தால் அவரைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியும் திரு. சில்வா அவரைத் துறவு மனப்பான்மை மிக்க வெளியார் என்று குறிப்பிட்டார், சில்வா தொடர்கிறார்,

'அரசியலில் அவர் அந்நியராக இருந்தார். சட்டத்தரணியாகவும் உயர்ந்த இராணி அப்புக்காத்து ஆகவும் அரசியலுக்கு வெளியே இருந்த அவர் எதிர்பாராத வகையில் அரசியலுக்கு வந்தார். அரசியலுக்கு வர வேண்டுமென்ற திட்டத்தோடு அவர் அரசியலுக்கு வரவில்லை' (The Ascetic-Outsider, he is l' etranger the lawyer outsider and top flight Queen's Counsel who has become a politician more by accident than by design."

தந்தை செல்வாவை அரசியலுக்குஇழுத்து வந்தவர் கொழும்பில் சட்டத் தரணியாக இருந்தவரும் பிரபல பொதுமனிதருமான திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களே. கோப்பாய்த் தொகுதிப்பா.உ.ஆகஇருந்து மறைந்த திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் தந்தையாராகிய இவர் செல்வாவை அடிக்கடி கொழும்பு அல்பிரட் கவுஸ் கார்டின்ஸில் உள்ள அவரது வீட்டுக்கு வந்தும் தொலைபேசி மூலமும் அரசியலுக்கு வருமாறு அழைத்தார். ஆனால் அரசியற்பாதையில்செல்வா அடியெடுத்து வைத்தபின் அவர்அதிலிருந்துபின்வாங்கவில்லை பாதைவிலகவில்லை. விட்டு விட்டு ஓடவுமில்லை.

**1618இல் போர்த்துக்கேயர்இலங்கையிலிருந்த தமிழ் அரசைஅழித்தனர் இந்த அரசை மீள்வித்துப் புனரமைத்ததேசபிதாதமிழினத்தின் தேசபிதா திரு, செல்வநாயகம்என்றதத்துவத்தையேநான் இங்கு எடுத்துரைத்து நிறுவியுள்ளேன்.**

பிரித்தானியர் ஆட்சியில் சிங்களர், தமிழர் முஸ்லிம்கள், இந்தியத் தமிழர் பறங்கியர் ஆகிய அனைவரும் இத்தீவின் ஓரின மக்கள் என்று கருதப்பட்டனர். பிரித்தானியர் ஆட்சியிலும் 1947க்கும் 1956க்கும் இடைப்பட்ட சுதந்திரத்துக்குப் பிந்திய காலத்திலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் யாழ்ப்பாணத் தமிழர் மன்னார்த்தமிழர், வன்னித் தமிழர் திருமலைத்தமிழர் மட்டக்களப்புத்தமிழர்கொழும்புத்தமிழர் இந்தியத்தமிழர் எனப் பிளவுபட்டுநின்றனர்.

திரு. செல்வநாயகத்தின் தலைமையில் இப்பிரிவுகள் அனைத்தும் தமிழர் குடித்தொகை என்றுமுழுமையின் கூறுகளாக ஒன்றிணைக்கப்பட்டன.

திரு. செல்வநாயகம் சிங்கள நாட்டினத்திலிருந்து வேறுபட்ட புதிய தமிழர் நாட்டினத்தை உருவகப்படுத்தி உருவாக்கினார். அதுவே அவருடைய மிகப் பெரிய சாதனை ஆகும். தமிழரின் அண்மைக்கால வரலாற்றில் இது ஒரு சிறந்த வழிகாட்டும் பங்களிப்பாகும். இது மிக்க சிரமசாத்தியமான பணி என அவரே என்னிடம் கூறினார்.

தமிழ்பேசும் மக்கள்புத்திசாலிகள் எனவே தனித்துவம்மிக்கவர்கள்என்றுஅவர் கூறினார். எல்லாப் பிரான்சியரும் ஒருவரை யொருவர் வெறுக்கின்றனர். ஆனால் அவர்கள் பிரான்சை நேசிக்கின்றனர் என தளபதி சாள்ஸ் டீ கோல் தமது சகாக்களான பிரான்சியரை பற்றிக் கூறியதே எனது நினைவுக்கு வந்தது.

ரூஸ்வெல்ட் போலியோ நோயினால் பீடிக்கப்பட்டு இடுப்புக்குக்கீழ்இயக்கமற்ற உடலுடன்இருந்தார் நடக்க முடியாதவராக இருந்தார். சக்கரவண்டியில் செல்ல வேண்டியவரானார். ஆனாலும் அவர் அமெரிக்க மக்களின்பேரன்புக்குப் பாத்திரரானார்.மக்கள் அவரைத் தொடர்ந்து தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். திரு. செல்வா மக்கள்முன் நின்று பேசுவது தலைவர் ரூஸ்வெல்ட் நிற்பதை ஒத்திருந்தது.

திரு.செல்வநாயகம் 1949 இல் திரு. ஜீ,ஜீ, பொன்னம்பலத்தின் தொடர்புகளையும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தொடர்புகளையும்அறுத்துக்கொண்ட

களைச் செவிமடுக்கமாட்டார்என்பதையும் அது உருவகப்படுத்தியது. இறுதியில் அவருக்குக் கிடைத்தது கண்மூடித்தனமாக அவரை தொடரும் ஆதரவாளர்களே. எது நடந்தாலும் இவரை நம்பிப் பின்தொடர மக்கள்தயாராகஇருந்தார்கள்.

1922இல் முஸ்தாபா கமால் அற்றுரேக் முதலாம்

பேராசிரியர் அ. ஜெயரத்தினம் வில்சன்

தமது இலங்கைத் தமிழரசுக்கட்சி தமிழ்பேசும் மக்களை ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபடுத்தி அவர்கள் செல்ல வேண்டிய நெறியை வகுத்துக்காட்டி சுயமதிப்புக்கும் தேசிய இனத்துவத்திற்கும் அது தவிர வேறு வழியே இல்லை என உணர வைத்தது என அவர் கூறினார். இறுதியில் மொழியும் பிரதேசமும் பிளவுபடா முழுமையான ஒன்று என அவர் மக்களுக்கு உணர்த்தினார்.

தேசியத் தலைவருக்கு இருக்கவேண்டியவை என எதிர்பார்க்கப்படும் எந்த இயல்பும் திரு. செல்வநாயகத்திடம் இருக்கவில்லை,நோயுற்ற கேள்விப் புலன் குறைபாடுள்ள உரத்துப்பேச முடியாத இத்தலைவர் மக்களின் பெருமதிப்புக்கு ஆளானார்.

நான்குமுறை தொடர்ந்து அமெரிக்க மக்கள் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட பிராங்கிளின் ரூஸ்வெல்ட் அவர்களையே நோயுற்றுநலிந்த இத்தலைவருடன்ஒப்பிட முடியும்.

போது அவர் அரசியலிலிருந்துமுற்றாகஒதுக்கப்படுவிட்டதாக 1950இல் சட்டவைத்தியக் கல்லூரிகளின் மாணவர்கள் நினைத்தார்கள்.

1950இல் சட்ட வைத்தியத் துடிப்படி ஆட்டத்தின் போது செல்வாவின் காதுகேளாக் குறைபாட்டையும் அரசியல்துறவையும் காட்ட நினைத்து ஒரு கொடும்பாவி செய்தார்கள். அதன் கரங்களில்'செவிட்டுத் தலைவரும் குருட்டு ஆதரவாளர்களும்' என்று சுலோக அட்டை தொங்கவிடப்பட்டது. 1950இல் அந்தச் சுலோக அட்டை தீர்க்கதரிசனம் மிக்கது என எவரும்எண்ணியிரார். அன்று அது இழிவு செய்யும் நோக்குடையதாக இருந்தாலும் எதிர்கால நிகழ்வின் குறியீடாக அமைந்துவிட்டது.

**செவிட்டுத் தன்மை படைத்த தலைவர் மாற்றுவழிகள் எதற்கும் செவிகொடார்என்பதன்உருவகமாக அமைந்தார், அவர் எதிரிகளின் கூக்குரல்**

உலகப்பெரும் போரில்சத்திவாய்ந்த பலவெற்றிகளைஈட்டிய நேசநாடுகளுடன் நடத்தியபோரில் வெற்றி பெற்றார். எவ்வாறு வெற்றிபெற்றீர்கள் என்று கேட்டபோது 'தொலைபேசிக் கம்பிகள் மூலம் வென்றேன்' என்று கூறினார் தொலைபேசித்தொடர்புகள் மூலம் வெவ்வேறு இடங்களிலும்பரந்துகிடந்த மக்களையும் பிரதேசத் தலைவர்களையும் சமாதானப்படுத்தி, தொடர்பு கொண்டு அவர்வெற்றிக்கு வழிவகுத்தார்.

பாகிஸ்தான் தேசபிதா முகமதலி ஜின்னாவுடையஆதரவாளர் ஒருவர் தேச விடுதலையில்முஸ்லிம்லீக் ஆற்றிய தொண்டுகளையும் தியாகங்களையும்வானளாவப் புகழ்ந்தார்,அப்போதுஜின்னா குறுக்கிட்டுவீணாகப் பேசாதீர், நானும் எனது சுருக்கெழுத்தாளருமே பாகிஸ்தானை உருவாக்கினோம் என்றார்.

செல்வாவின் நிலை என்ன, நான் மேலே குறிப்பிட்ட நண்பர் மேவின் த சில்வாவின் கட்டுரையையே மேற்கோள்காட்ட விழைகிறேன்? "செல்வா எம்மைக் கைவிடமாட்டார்" என்று சொன்னபலர் இருக்கிறார்கள்" செல்வா தண்ணளி உடையவர், வெளிப்படையாகப் புலப்படும் நேர்மை மிக்கவர்"

திரு, சில்வா எடுத்துக்காட்டிய இக்குணங்களே திரு. செல்வநாயகம் தமிழ் நாட்டினத்தை உருவகப்படுத்த உதவின என நான் கருதுகிறேன்.

செல்வாவுக்குமுன்னிருந்த தலைவர்கள் தமிழ்பேசும் மக்கள் எவ்வாறு சிங்கள மக்களுடன் ஐக்கிய இலங்கையில் இணைந்து வாழ்ந்து செயற்பட முடியும் என்பது பற்றியே பேசினார்கள்.

செல்வா என்ற தீர்க்கதரிசியேஅது சாத்தியமற்றது என உணர்ந்தார். எனவே அவர்தனியானதும் தனித்துவம் மிக்கதுமான தமிழ் நாட்டினத்தை உறுதியான அடித்தளத்தில் உருவாக்க உழைத்துவெற்றி கண்டார்.

—6-ம் பக்கம் பார்க்க

---

—2-ம் பக்கத் தொடர்

விடுதலை இயக்கம் நடத்துகிறபோராட்டம்— இப்படியான ஒரு நிலைமைதான் இலங்கைத் தமிழர்களது நிலையும் என்று கூறுகிறீர்களா?

'இந்தியா ருடே'யின் படி திரு. அமிர்தலிங்கத்தின் பதில் வருமாறு:

"ஆம் பெரும்பாலும் அப்படித்தான். இத்தீவில் எமக்கென்றொரு தாய்நாடுஇருந்தது. எங்கள் சொந்த அரசு இருந்தது எமது சொந்த இராச்சியம் இருந்தது,பிரிட்டிஷார்தான்நாடு முழுவதையும் முதல்தடவையாக ஒன்றாக இணைத்தனர். இன்று சுதந்திரம் ஜனநாயகம் என்கிறபெயரின்கீழ் அதிகாரம் சிங்களவர் கைக்குச் சென்றுவிட்டது, அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தி எமது சகல உரிமைகளையும் பறித்துவிட்டனர்"

ஆனையிறவுக்குத் தெற்கே பெருந்தொகையான தமிழர்கள் சொந்தமாக நிலமும் சொத்தும் வைத்திருப்பதையும் பல்வேறு தொழில் துறையிலும்தொழில் நுட்ப நிபுணத்துறையிலும் முன்னணியில் இருப்பதையும் அரசாங்கத்தில் உச்சக்கட்ட அந்தஸ்து வகிப்பதையும் வெளிநாட்டுச் சேவையில் இருப்பதையும் இங்கு அழுத்திக்காட்ட வேண்டியதில்லை. அமிர்தலிங்கம் கூற்றுப்பொய் என்பதை இவைபறைசாற்றுகின்றன.

ஒரு மனிதனால் தனதுஉடலுறுப்புக்களில்முக்கியமானதான நாக்கைக்கட்டுப்படுத்த முடியாதுபோகுமானால் அவனால் வேறு எதையும் கட்டுப்படுத்த முடியாது என்று 2000 வருடங்களுக்கு முன்பே கூறப்பட்டுள்ளது.

அந்தக் கருத்து இன்றைக்கும் பொருத்தமானது.

**தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் வட இலங்கையின்அரசியல் பயங்கரவாதிகளுக்கும் பொதுவான அடிப்படைக் குறிக்கோள் ஒன்றே ஒன்று தான்இலங்கையில் தமிழீழத்தனி நாட்டைமீளஉருவாக்குவதே அந்த இலட்சியமாகும்.**

'இந்து'ப் பத்திரிகையிலிருந்து திரு. அமிர்தலிங்கத்தின் பேட்டியை மறுபிரசுரம் செய்த டெயிலிமிரரின் அதே இதழில்,இந்துப் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட அரசியல் தொடர்புள்ள மற்றோர் செய்தியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"வட இந்திய மாநிலமான பஞ்சாப்பில் பட்டப்பகலில் ஜனதாக்கட்சி பிரமுகர் ஒருவர் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் "காலிஸ்தான்" என்றோர் தனிநாட்டை இந்தியாவிலிருந்து பிரித்து உருவாக்கச் சீக்கியர்கள் போராடிவரும் இம் மாநிலத்தில் நடைபெற்ற ஏழாவது கொலை இதுவாகும்" —இதுவே செய்தி.

# யாழ்ப்பாணத்தை மறக்காத எடின்பரோ கோமகன்

சிறீலங்கா அரசு தமிழீழப் பகுதிகளுக்கு இரும்புத் திரை போட்டு, வெளிநாட்டுப் பிரமுகர்களை இங்கு வரவொட்டாமல் தடுத்தாலும் அவர்கள் மனதில் யாழ்ப்பாணம் இருந்து கொண்டேயிருக்கிறது என்பதற்கு இதோ ஒரு உதாரணம்—

அண்மையில் இலங்கைத் தீவுக்கு வந்திருந்த எலிசபெத் மகாராணியின் கணவரான எடின்பரோகோமகன், யாழ்ப்பாணத்தை மறந்துவிடவில்லை. இரண்டுதடவை அவர் மனதில்யாழ்ப்பாணம் வந்து போயிருக்கிறது.

கொழும்புபண்டாரநாயகா ஞாபகார்த்த மண்டபத்தில் இளைஞர்களுக்குப்பரிசுவழங்கியபோது, தம்மிடம் பரிசு வாங்க வந்த ஒருவர் தமிழ் இளைஞர் என்பதை இனங்கண்டு, "நீங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டிருக்கிறார் எடின்பரோ கோமகன்.

1-11-81 வீரகேசரியில் "அரச தம்பதிகளோடுஅரை மணிநேரம்" எனும்கட்டுரையில் இடம்பெற்ற ஓர் பகுதி இது:-

"தனதுகையிலிருந்தபானத்தைக் கொஞ்சம் வாயில் ஊற்றிக் கொண்ட இளவரசர் பிலிப், மாற்றுமொரு செய்தி நிருபரின் கேள்வியொன்றுக்கு அளித்த பதில் என்னை ஆச்சரியத்தில்ஆழ்த்தியது. தனிப்பட்ட பாதுகாப்புப் பற்றி அவருக்கும் எமக்குமிடையே எழுந்தகருத்துப் பரிமாற்றம் ஒன்றில் "இலங்கையின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் நீங்கள் பாதுகாப்பாகஇருப்பீர்கள்" என்று ஆங்கிலப் பத்திரிகையைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர் கூறினர்.

**"யாழ்ப்பாணம் சென்றாலும் பாதுகாப்புடன் நான் இருக்கமுடியுமா?" என்று கூறி அவர் வாய்விட்டுச் சிரித்தார்."**

ஆக தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றி இளவரசர் பிலிப் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார் என்பதுஇதிலிருந்து தெரிகிறதல்லவா?

## யாழ். பொது நூலக நம்பிக்கை நிதிக்கணக்கு.

"யாழ் பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதி" என்ற பெயரில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் திறக்கப்பட்டுள்ள இல.2893 கணக்கிற்கு அனுப்பிவிட்டு தனக்கு அறிவிக்கும்படி யாழ் மாநகரசபை கேட்டுக்கொள்ளுகிறது."

—1-ம் பக்கத் தொடர்

உடன்பட்டிருப்பதாக அவர் (அமீர்) தெரிவித்தார். "ஆனால் இது ஒரு திட்டத்தை FORMULA விசுவாசத்துடன் செயல்படுத்தி, அது எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப்பார்ப்பதற்கு மட்டுமே" என்று அவர் மேலும் கூறினர்.

ஜெயவர்த்தனவின்நிர்வாகப்பரவல் திட்டம் அமிர்தலிங்கத்துக்கு திருப்தியளிக்குமளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டால்அவர் தனித்தமிழ் நாடமைக்கும் கொள்கையைக்கைவிடுவாரா என்று கேட்கப்பட்டபோதுஅதைத் திரு. அமிர்தலிங்கம் நிராகரித்தார்.' அவ்வாறு கூறுவது புனைந்துரையாகும் என்றார் அவர் 'றிவ்யூ'வுக்கு அளித்திருந்த பேட்டியில்.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்விமான் ஒருவர் நிலைமையைத் தொகுத்துக்கூறினர்.

"தங்களைப் பின்பற்றுவோர் அனைவரதும் முழுமையான ஆதரவுக்கு உத்தரவாதம் அளிக்க முடியாத இரு தலைவர்களுக்கிடையே உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளது.

"அமிர்தலிங்கம் ஒப்புக்கொண்டபடி செயல்படத் தவறினல் ஜெயவர்த்தன எவ்வாறு அதற்கு எதிர்நடவடிக்கைகளை மேற்கொள்வார்?

மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள தீவிரவாதிகளைத் தனிமைப்படுத்தி அழிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு அமிர்தலிங்கம் ஆதரவளிப்பாரேயானுல் அவரது தலைமை அத்தோடு நிராகரிக்கப்பட்டுவிடும்.இதன் விளைவாக அவரது ஆதரவாளர்களே அவரை ஐந்தாம் படையினர் என்று ஐயங் கொள்ளக்கூடும்"

தமிழர்கள் மீது நடைபெற்ற மிலேச்சத்தனமான அடக்குமுறைத் தாக்குதல் அவசரகாலச்சட்டம் இராணுவபொலீஸ் தூண்டுதல் நடவடிக்கைகள் ஆகிய சூழ்நிலைகளின் மத்தியிலேயே இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இராணுவத்துக்கும் பொலீசுக்கும் அதிகாரம் வழங்கியுள்ளது. அவர்கள் எந்தநேரத்திலும் சோதனையிடலாம் விசாரணை நடத்தலாம்க்ம களைக் கைதுசெய்யலாம்தடுப்புக்காவலில் வைக்கலாம்.

இந்த விதிகளைக் கைகளிலே வைத்துக் கொண்டு பொலீசும் இராணுவமும் ஏராளமான தமிழர்களைக் கைதுசெய்துள்ளது, அவர்களது சொத்துக்களை அழித்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் அடங்கிய நூலகம் தீயிடப்பட்டது.

இத்தாக்குதல்கள் வெளிவெளியாக இனவாத அடிப்படையிலேயே நடந்தன ஏனெனில் ஒரு சிங்களக் கொள்ளையனே கொலைஞனே அல்லது யூ.என்,பி உறுப்பினரோதானும் தண்டிக்கப்படவில்லை

இவர்களில் பலர் அண்மையில் தமிழர்கள் மீது நடத்தியதாக்குதலில் பங்குபற்றியவர்கள் என்பதற்கு போதிய ஆதாரம் உண்டு.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இப்போது விடுக்கப்பட்டுள்ள கட்டளை— வடமாகாண யாழ்ப்பாணப்பகுதியிலும் கிழக்கு மாகாணத் திருகோணமலைப் பகுதியிலும் எந்தவடிவத்திலாவது "தீவிரவாதம்" தலைதூக்குமானல் அதைக்கட்டுப்படுத்தி முறியடித்துவிட வேண்டும் என்பதுதான்,

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தீவிரவாதம் தலையெடுக்குமானல்—இலங்கையின்தெற்குப்பகுதிகளில் சிறுபான்மையினராக வாழும்தமிழர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இப்போது தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஜெயவர்த்தனவின் செய்தி மிகவும் தெளிவானது. "ஒத்துழையுங்கள் அல்லது மேலும் மேலும் பொலீசார் கரங்களினல் முன்புபோல வாங்கிக்கட்டுங்கள்" என்பதே அது.

யூ.என்.பியின் கையிலிருக்கும் நாடாளுமன்ற ஆட்சி ஒரு கபடநாடகமாகி விட்டது.

முன் எப்போதுமில்லாதவாறு மரபுக்கு முரணுக— எதிர்க்கட்சித்தலைவர் திரு, அமிர்தலிங்கத்துக்கு எதிராக கடந்தமாதம் யூ,என். பி. உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக்கொண்டு வந்தார்கள்-

ஆகவும் இழிவான நரகல் மொழிகளை எந்த ஒரு உறுப்பினரும் அங்கு பேசுவதற்கு இடமளிக்கப்பட்டது. அமிர்தலிங்கம் தெரிவித்த கருத்துக்காக அவரை இழிவாகப் பேசியதுடன் தனிநாடு கேட்டதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

"அமிர்தலிங்கத்தைத்தூக்கில்போட வேண்டும்"

"காலிமுகக்கடற்கரைக்கு அவரை இழுத்துச் சென்று சுட்டுத்தள்ள வேண்டும்"

"அவரை இரண்டாகப் பிளக்க வேண்டும்"

என்பன அங்கே பேசப்பட்ட சில வார்த்தைகள்"

இவ்வாறு 'வேக் கேர்ஸ் நியூஸ்' ஏட்டில் ஜொன்பெக் என்பார் எழுதியுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் நான்காவது அகிலத்தின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய செயற்குழு செப்டம்பர் 22ஆம் திகதி வெளியிட்டிருந்த அறிக்கையும் இக்கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

"நீம் சுகாதார தூபம்"

வீட்டில் உள்ள நுளம்பு; இலையான்; பூச்சி; புழு; ஆகியவற்றை நீக்கி வீட்டில் நறுமணம் கமளச் செய்கின்றது. வாங்கி உபயோகியுங்கள்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

கெபிட்டி 6-வது வாரம்
(கொட்டாஞ்சேனை)

தினசரி 3 காட்சிகள், சனி ஞாயிறு 4 காட்சிகள்

(இசைப் பிரியர்களுக்கு பெருவிருந்து)

மஞ்சுபார்கவி துளசிராம் சந்திரமோகன்

-நடித்த-

சங்கராபரணம்

[ஈஸ்ட்மென் கலர்]

செல்லமஹால் 4-வது வாரம்
(கொட்டாஞ்சேனை)

தினசரி 3 காட்சிகள்!

நாகேஷ், மேஜர் சுந்தரராஜன், ஜெயலலிதா, ஏ. வி. எம். ராஜன் முத்துராமன்

மற்றும் பலர் நடித்த

மேஜர் சந்திரகாந்த்

வெகு விரைவில்!

எம். ஜி. ஆர். அளிக்கும்

சிரித்து வாழ வேண்டும்

(வண்ணப்படம்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால், யாழ்ப்பாணம், மகாத்மா காந்தி வீதி, 15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.